# மின்நிலா

ஜூலை 13, 2020



engalblog.blogspot.com

**எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ...**

**இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...**

engalblog@gmail.com

**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**

**நன்றி.**

அட்டைப்படம் : ஊட்டி மலர்க்கண்காட்சி 2020

படம் அனுப்பியவர் : K G Visuweswaran.

============

பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள்

அனுப்பியவர் : kayjee


**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**


மின்நிலா 007 (முந்தைய இதழ் சுட்டி)

# பொருளடக்கம்

கார்ன் ஆன் டோஸ்ட் - ரமா ஸ்ரீநிவாசன்................. 2
அம்மா The Great :: துரை செல்வராஜூ ........................7
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்....... 23
கேள்விக்கென்ன பதில்?.............................................24
விடாக்கொண்டர் கொடாக்கண்டர் கேஜிஜி !!....... 29
வீடியோ : நிலை மயங்கி மயங்கி
காலமெல்லாம் கானம் பாடுவோம்...........................47
சுவாரஸ்ய மனிதர்கள்............................................ 51
பாசிடிவ்...................................................................53
பின் ட்ராப் ஸைலென்ஸ் - ரமா ஸ்ரீநிவாசன் ........57
அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி........................ 65
அ ப கு - கதை விமரிசனம் : கு - கு......................... 69

# கார்ன் ஆன் டோஸ்ட் - ரமா ஸ்ரீநிவாசன்

நாங்கள் நுங்கம்பாக்கத்தில் குடியிருப்பதால், வெளியில் சென்று சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தால், உடனே ஹாரிஸன் ஹோட்டலில் உள்ள “ஈடன்” ரெஸ்டாரண்ட்தான் நினைவுக்கு வரும். நாங்கள் யாவரும் விரும்பி உண்ணும் ஒவ்வொரு சிற்றுண்டியும் அங்குள்ள எல்லா பணியாளர்களுக்கும் தெரியும் என்றால் நாங்கள் எவ்வளவு சுவைத்து உண்ணும் குடும்பம் என்று பாருங்கள்!

எப்போது அங்கு சென்றாலும் என் இரு பெண்களும் இந்த கார்ன் ஆன் டோஸ்ட் ஆர்டர் செய்து விடுவார்கள். நாங்களும் ஒரு வாய் ருசிப்பதற்காக சாப்பிட்டு பார்ப்போம். அபாரமாக இருக்கும். ஒவ்வொரு முறையும் அபாரம்.

இது எங்கள் “மிகப் பிடித்த” ஐட்டமும் ஆகிவிட்டது. இப்போது இதன் செய்முறையைக் கீழே விளக்கியுள்ளேன்.

வேண்டிய பொருட்கள் :
ஸாசிற்கு :
வெண்ணெய் : 1 டீஸ்பூன்
பால் : 1 கப்
சீஸ் : 2 – 4 டீஸ்பூன்கள் (சீவப் பட்டது)
"ஆல் பர்ப்பஸ் மாவு" அல்லது "மைதா மாவு"
உப்பு : தேவைக்கேற்ப (1 சிட்டிகை)
மிளகு : 1 சிட்டிகை (பொடி செய்யப்பட்டது)

கார்ன் கலவைக்கு :
கார்ன் மணிகள் : ½ கப் (குக்கரில் வேக வைத்துக் கொள்ளவும்)

எண்ணெய் : ½ டீஸ்பூன்
வெங்காயம், தக்காளி : 1 கப் (பொடிப் பொடியாக வெட்டிக் கொள்ளவும்)
மிளகாய் பொடி : ½ டீஸ்பூன்
கஸூரி மேத்தி : ¼ டீஸ்பூன்

செய்முறை :

1. முதலில் வெண்ணெயை பேனில் போட்டு சிறிது உருகிய பின்னர், சிறிது “ஆல் பர்பஸ் ஃப்ளவர்” அல்லது மைதா மாவை சேர்த்து நன்றாக மாவும் வெண்ணெயும் ஒன்று சேரும்வரை கிளறவும்.

2. இப்போது, கேஸ் ஸ்டவ்வை 'சிம்'மில் வைத்து, மெதுவாக பாலை சேர்க்கவும். கை விடாமல் கிளறி கட்டி தட்டாமல் பார்த்து கொள்ளவும்.

3. இப்போது, சீஸை சேர்க்கவும். அது நன்றாக உருகி கலவையுடன் கலந்துவிடும்.

4. இதனுடன் உப்பையும் மிளகுப் பொடியையும் சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கி தனியாக வைக்கவும்.

5. வேறொரு பேனில் எண்ணெய் விட்டு, மிளகாய்ப் பொடி, வெங்காயம், தக்காளித் துண்டுகளை நன்றாக வதக்கவும்.

6. ஒரு நிமிடத்திற்குப் பிறகு, வேக வைத்த சோள மணிகளை இவற்றுடன் சேர்க்கவும்.

7. பேனை மூடி நன்றாக 4 அல்லது 5 நிமிடங்கள் கொதிக்க விடவும்.

8. இப்போது, இந்த சோள விழுதை வெள்ளை ஸாசுடன் சேர்க்கவும்.



பின்னர், தேவையான ஹோல் வீட் ப்ரெட் ஸ்லைஸ்களை வெண்ணெயோ நெய்யோ விட்டு டோஸ்ட் செய்த பின்னர், அந்த கலந்த வெள்ளை ஸாசை அதன் மீது ஊற்றி நன்றாக ஸ்லைஸ் முழுக்க பரப்பவும். இதன் மேல் லேசாக கஸூரி மேத்தியைத் தூவி, சுடச் சுட பரிமாறவும். மிக அம்சமாக இருக்கும்.






எங்கள் வீட்டில் ஆல் பர்பஸ் ஃப்ளவர்” அல்லது மைதா இல்லாததால், நான் சிறிதளவு கோதுமை மாவு

**உபயோகித்தேன். அதனால் வர்ணம் மாறுபட்டு இருக்கின்றது. மைதா உபயோகித்தால், கீழேயுள்ளது போல் இருக்கும்.**




பொருளடக்கம்

# அம்மா The Great :: துரை செல்வராஜூ

சூரியன் மெல்ல மெல்ல உச்சி வானுக்கு நகர்ந்து கொண்டிருந்த நேரம்...

வெய்யிற்கதிர்கள் இன்னும் உக்ரமாகவில்லை...

மாசி மாதக் குளிர் முடிந்து வெளியிலும் வீடுகளுக்குள்ளும் வெதுவெதுப்பு பரவிக் கொண்டிருக்க -

காவேரி நகரில் மூன்றாவது குறுக்குத் தெருவின் முடுக்கு வீடு பெரிதாக நிழல்பரப்பிக் கொண்டிருந்த வேப்ப மரத்தின் கீழ் சிலுசிலு - என்றிருந்தது...

கிரஹப் பிரவேசம் ஆகி இன்னும் வருடம் நிறையவில்லை...

மூத்தவள் வெண்ணிலா.. ரொம்பவும் கூச்ச சுபாவம்...
ஆசிரியை பயிற்சி முடித்து விட்டு, வேலையோ கல்யாணமோ எதுவானாலும் சரி!... காத்திருக்கிறாள்...

தற்போதைக்கு அடுத்த தெருவில் உள்ள சிறார் பள்ளியில் வேலை.. அவளது சேமிப்புக்கு ஆகின்றது..




அவளுக்கு அடுத்தவள் மலர்விழி... வெடித்தனமான பேச்சு... அக்கா பேசாததையும் சேர்த்து வைத்துப் பேசுவாள்..

மேல்நிலை இரண்டாம் வருடம்... டாக்டராக வேண்டும் என்று கனவு...



இரண்டு பேருக்கும் சீர் வரிசை கொடுக்கவென்று சிவப்ரசாத்... மலர்விழிக்கு இரண்டு வயது இளையவன்...

கிரிக்கெட் மட்டையுடன் பிறக்கவில்லையே தவிர பள்ளி நேரம் போக மட்டையுடனேயே சுற்றிக் கொண்டிருப்பவன்...

இப்போது எந்தத் திடலில் ஆடிக் கொண்டிருக்கின்றானோ...

குடும்பத் தலைவனின் தற்போதைய இருப்பிடம் வளைகுடா நாடுகளில் ஒன்றான மஸ்கட்...

ஆகையால் கதைக் களத்துக்குள் தந்தையும் மகனும் வருவதற்கு வாய்ப்பே இல்லை...

சொந்த வீடு.. மகள்களின் கல்யாணத்துக்கு வேண்டிய நகைகள் ரகசியமானதொரு இடத்தில்... கூடுதல் செலவுக்கு என்று வங்கிக் கணக்கில்...

மற்றபடிக்கு பண்ட பாத்திரம் பீரோ கட்டில் வகையறாக்களுக்கு அண்ணாச்சி இருக்கவே இருக்கிறார்...

மற்றபடிக்கு எவ்வித பிரச்னயும் இல்லை...

இருப்பினும் நல்ல இடத்திலிருந்து மாப்பிள்ளை வரவேண்டுமே!.. என்ற கவலை மட்டும் கஸ்தூரிக்கு...

கஸ்தூரி - குடும்பத் தலைவி..

அவ்வப்போது சாயுங்காலம் விளக்கேற்றும் வேளையில் கூடத்தின் மேல்புறம் அதாவது மேற்குத் திசையில் கவுளி கிச்கிச்... என்று சத்தம் கொடுக்கும்...

கஸ்தூரிக்கு சந்தோஷமாக இருக்கும் - திருச்சி பக்கத்தில இருந்து பொண்ணு கேட்டு வரப்போறாங்க!.. என்று...

ஆனால் பட்டுக்கோட்டையிலிருந்து இரண்டு ஜாதகம் வந்ததே தவிர திருச்சி பக்கத்தில் இருந்து எதுவும் வரவில்லை...

" வரும்... வரும்!.... " - நம்பிக்கையுடன் நாட்கள் நகர்ந்த வேளையில் அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை...

" மலர்... முருங்க மரத்துல இருந்து ரெண்டு இணுக்கு கீரை உடைச்சிக்கிட்டு வாம்மா.. இந்த வெண்ணெய்யை உருக்குவோம்!... "

கஸ்தூரி சொன்னதும் -

" போம்மா... உனக்கு வேற வேலையில்லை!... " - என்றபடி துரட்டியை எடுத்துக் கொண்டு முருங்கை மரத்தை நோக்கி நடந்தாள் மலர்விழி...



நீண்ட துரட்டியால் தழைத்து வளர்ந்திருந்த முருங்கையின் நுனியை இழுத்து வளைக்க - அது சடாரென நாலடி நீளத்துக்கு முறித்துக் கொண்டு விழுந்தது...

" யம்மாடி... பார்த்து!..." - என்று பதறியபடி கொல்லைப் புறத்துக்கு ஓடினாள் கஸ்தூரி..

" ஒன்னும் இல்லேம்மா!.. இதுக்கெல்லாமா பயப்படுவே?... சரியான பயந்தாங்கொள்ளி!..." - சிரித்தாள் மலர்விழி..

" பொண்ணாப் பொறந்துட்டியே... அடுத்தவன் கையில கொடுக்கிற வரைக்கும் பயப்பட வேணாமா!.. " - பதற்றத்தைக் காட்டிக் கொண்டாள் கஸ்தூரி..

" அப்போ அடுத்தவன் கையில கொடுத்ததுக்கு அப்புறம் கை கால்..ல அடிபட்டா பரவாயில்லையா?... "

" நல்லா இருக்குடா தங்கம் நீ பேசறது... பொண்ணாப் பொறந்ததுங்க ஒச்சம் இல்லாம இருக்கணும்.. ங்கறது தான் பெத்தவங்க எல்லாருக்கும் ஆசை!... "

கஸ்தூரி பரிந்து கொண்டு நின்றாள்...

" அப்போ பசங்களுக்கு!?.. " - மலர் ஆவலுடன் கண்களை உருட்டினாள்...

" ஏய்.. மலர்!... ரெண்டு இணுக்கு கீரை ஒடிக்கிறதுக்குள்ள இவ்ளோ பேச்சா?... " - வெண்ணிலா அதட்டினாள்...

"ஏ!... புஸ்தகப் பூச்சி... துரட்டிய எடுத்துக்கிட்டு வந்தவ நானு... அம்மாவும் நானும் எல்லா விஷயத்தையும் பேசுவோம்... நீ புத்தகமே... ன்னு இரு!.. "

அக்காவை அதட்டினாள் மலர்...

உண்மையில் வாயில்லா பூச்சி வெண்ணிலா...
பலசமயங்களில் அமைதியாகி விடுவாள்...
தங்கையிடம் கொள்ளைப் பிரியம்...

இருந்தாலும் அவ்வப்போது இவளது பர்சனல் ப்ராப்பர்டீஸ் - கண்மை, சாந்து.. ஒட்டும் பொட்டுக்குத் தடை.... அதனால் சாந்து தான்... ஹேர்பின், அந்தக் கிரீம், இந்தக் கிரீம் - எல்லாம் அவளால் கொள்ளையடிக்கப்படும் போது கோபம் வரும் ...

ஆனாலும் ஒன்றும் சொல்ல மாட்டாள்... அவளுக்கு வேதனையான சமயங்களில் தலையை வருடி விட்டு - தோளில் சாய்த்துக் கொள்வாள்... இன்னொரு தாய் அல்லவா!..

அப்படியிருக்க இப்போது பிரச்னை வேறு கோணத்தில்..

" நான் எவ்வளவு நேரம் காத்திருக்கிறது நெய்க் கீரை திங்கிறதுக்கு?..."

அவளுடைய அவசரம் அவளுக்கு...

இளஞ்சூட்டில் வெண்ணெய் உருகும்போது முருங்கைக் கொழுந்துகளைப் போட்டு அதை முறிப்பது வழக்கம்...

சூடான வெண்ணெயில் கருகிய முருங்கைக் கொழுந்துகள் முறுமுறு.. - என்று புத்துருக்கு நெய்யின் வாசத்துடன் தெருவெங்கும் மணக்கும்...

அது எல்லாருக்கும் மிகவும் பிடிக்கும்... அதற்குத் தான் இப்போது ஆவல்.. காத்திருப்பு எல்லாம்..

சிவப்ரசாத் வீட்டில் இருந்தால் - 'நான் தான் இளைய பிள்ளை.. எல்லாமும் எனக்குத் தான்!... ' என்பான்...

வெண்ணிலாவும் மலரும் நெய்க் கீரையை தம்பிக்கே கொடுத்து விட்டு அவனிடமிருந்து கொஞ்சம் வாங்கி வாயில் போட்டுக் கொள்வார்கள்...

கவிஞர் வாலி நடிகர் திலகத்தின் படம் ஒன்றுக்காக -

' இது ஆனந்தம் விளையாடும் வீடு..
நான்கு அன்றில்கள் ஒன்றான கூடு!.. '

- என்று பாடல் எழுதியிருப்பார்... அது மாதிரி என்றைக்கும் இந்த வீடு..

" சரி.. சரி... துரட்டியை எடுத்த எடத்தில வச்சிட்டு வீட்டுக்குள்ள வாங்க!... மலர்... நீ இந்த மிச்ச மீதி கீரையெல்லாம் வாசல்ல போட்டுட்டு வா... மணியன் வீட்டு ஆடு வந்தா தின்னுட்டுப் போகும்!... "

மணியன்... ன்னா - அவன் தான் செல்லம்மா வீட்டு ஆடுகளை தினசரி வெளியில் விரட்டி மேய்த்துக் கொண்டு வருபவன்.. வாய் தான் பேசமுடியாதே தவிர ரொம்பவும் அறிவாளி...

" ஏம்மா!... முருங்கைக் கீரையில வடை செய்யேன்.. நம்ம ப்ளாக்...ல போட்டோவோட போட்டு விடுவோம்!.."

" ஏன்?.. ஸ்ரீராம் கேட்டாரா!.. இருக்கட்டும்.. அடுத்த வாரம் அனுப்புவோம்... நேத்து தானே மணத்தக்காளி கீரை சாம்பார்... இன்னிக்கும் கீரை வேணடாம்!..."

" தினசரி கீரை திங்கணும்.. ன்னு சொல்றாங்களே!... "

" சொல்றவங்க சொல்லுவாங்க... அவங்களுக்கு என்ன!... தினசரி கீரை தின்னால் குடல் இளக்கமாகிப் போகும்... வாரத்தில ரெண்டு மூனு நாளு போதும்... சரி.. ரெண்டு பேரும் வாங்க... வெண்ணெய்யை உருக்குவோம்!.. "

- கஸ்தூரி சமையலறைக்குள் நடந்தாள்...

" அம்மா!... நீ வெண்ணெய உருக்குறதுக்குள்ளே நான் பொன்னியின் செல்வனை படிச்சி முடிச்சிடறேன்!... "

- கேலியுடன் தொடர்ந்தாள் வெண்ணிலா...

அதற்குள் வாசலுக்குச் சென்ற மலர் சத்தம் போட்டாள்...

" அம்மா.. இங்கே வாயேன்.. மணியன் வீட்டு ஆடு என்னமோ மாதிரி நடக்குது!..

" ஸ்கூட்டர்காரனுங்க எவனும் அடிச்சுப் போட்டுட்டுப் போய்ட்டானுங்களா!... " பதற்றத்துடன் வாசலுக்கு ஓடினாள் கஸ்தூரி..

வாசலில் அந்த வெள்ளாட்டைப் பார்த்ததும் நிலைமை விளங்கி விட்டது கஸ்தூரிக்கு...

" வெண்ணிலா... அந்தப் பழைய சாக்கு கிடக்குதே அதை எடுத்துக்கிட்டு வாம்மா!... "

அதற்குள் மலரிடமிருந்து கேள்வி -

" ஆட்டுக்குட்டிக்கு என்னம்மா?... ஏன் இப்படி வயித்த தள்ளிக்கிட்டு நடக்குது? "

"ஆட்டுக்குட்டி இல்லேடி... இது ஆடு!... சினையா இருக்கு.. குட்டி போடப் போகுது!.. "

" அது சரி... சினை.. ன்னா.. என்ன?... " - அடுத்த அஸ்திரம் அவளிடமிருந்து...

"மகமாயீ!... இதெல்லாம் ஒரு கேள்வி... ன்னு கேக்கிறாளே!... சினை... ன்னா என்ன..ன்னு சொல்லுவேன்!... ம்ம்.... ப்ரக்னெண்ட்டா இருக்கிறது!... " ஒருவழியாய்ச் சொல்லி முடித்த கஸ்தூரிக்கு முகம் சிவந்தது போனது...

" ஓ.. புள்ளத்தாச்சியா?.. அப்போ ஆட்டுக்கு பாப்பாக்குட்டி பொறக்கப்போவுது!... "

கைகளைத் தட்டிக் கொண்டு வீட்டிற்குள் ஓடிய மலர்விழி கையில் செல்போனுடன் வந்தாள்...

" நான் பாப்பாக் குட்டியை ஷூட் பண்ணப் போறேன்!... "

- என்றபடி இப்படியும் அப்படியுமாக வளைய வந்தாள்...

" சீ!... இதையெல்லாமா வீடியோ பண்ணுவாங்க?... " - அதட்டினாள் கஸ்தூரி...

" போம்மா!... நான் இத வச்சி புராஜக்ட் செய்யப் போறேன்!.."

" ம்க்கும்!... கூட இருந்து அம்மாவுக்கு ஒத்தாசை பண்ணாம ஆட்டுக் குட்டிய வச்சுக்கிட்டு புராஜக்ட் செய்யப் போறாளாம் புராஜக்ட்!... "

" நாளைக்கு இந்த வீடியோவை எங்க சயின்ஸ் மேம் கிட்ட காட்டுவேன்... ரொம்பவும் அப்ரிஷியேட் பண்ணுவாங்க!... "

" என்ன புள்ளைங்களோ... இந்தக் காலத்துப் புள்ளங்க!... "

கஸ்தூரியின் முகத்தில் புன்னகை...

அதற்குள் கையில் பழைய சாக்குடன் ஓடி வந்தாள் வெண்ணிலா...

அந்த சினை ஆடும் அடைக்கலம் விரும்பி கஸ்தூரியை நெருங்கி வந்தது...

" வாடி... வா!... இந்தப் பக்கமா வா!.. " - என்று வெள்ளாட்டை அழைத்தபடி, வேப்ப மரத்து நிழலில் சாக்கை விரித்துப் போட்டாள் கஸ்தூரி...

மெதுவாக வந்த ஆடு சின்னதாக வட்டமிட்டபடி அந்தச் சாக்கு விரிப்பில் தன்னைக் கிடத்திக் கொண்டது...

மலங்க மலங்க விழித்த ஆட்டின் அருகில் கையிலிருந்த முருங்கைக் கொத்தைப் போட்டாள் கஸ்தூரி...

அந்த முருங்கைக் கொத்தினை வாயினால் பற்றிக் கொண்டது வெள்ளாடு..

" மலர்.. அப்புறமா வீடியோ எடுக்கலாம்... நீ உள்ளே போய் கொஞ்சம் தண்ணி சுட வச்சிட்டு அம்மாவோட பழைய சேலை ஒன்னு எடுத்துக்கிட்டு வாம்மா!... "

" நீ என்ன செய்யப் போறே!.. " - மலரிடம் வியப்பு...

" ஆட்டுக்குப் பிரசவம் பார்க்கப் போறேன்!... "
- என்றபடி ஆட்டின் வயிற்றை இதமாகத் தடவிக் கொடுத்தாள்...

" நான் வரலே!... எனக்குப் பயமா இருக்கு!.. "

- என்றபடி இரண்டடி பின்னுக்கு நகர்ந்தாள்...

அதற்குள் கையில் பழைய சேலையுடன் வந்தாள் வெண்ணிலா...

" என்னமோ டாக்டருக்குப் படிக்கப் போறேன்..ன்னு சொன்னியே!... "

" அது படிக்கிறப்போ பார்த்துக்கலாம்!... " - மலர் விழியின் கண்களில் கலவரம்...

" நீ சொல்லும்மா நான் செய்றேன்!... " - வெண்ணிலா பரபரத்தாள்...

" அந்தத் துணிய ரெண்டு மூணா கிழிச்சுக் கொடும்மா!... "

அந்த விநாடியில் -" மே!... " - என்றது ஆடு...

இறைவனின் பெருங்கருணையினால் அந்தச் சிற்றுயிர் தாங்கியிருந்த கர்ப்பத்தின் பனிக்குடம் உடைய அங்கே புதிய உயிர் ஒன்று வெளிப்பட்டது...

முன்னங்கால்களில் முகம் பதித்து வாழைப் பூ மொட்டாக இளங்குட்டி..

கிழித்துக் கொடுக்கப்பட்ட துணியில் இளங்குட்டியைத் தாங்கிக் கொள்ள நொடிப் பொழுதில் சுகப்பிரசவம்...

" வெண்ணிலா... உள்ளே போய் கொஞ்சம் மஞ்சத்தூளைக் குழைச்சிக்கிட்டு வாம்மா... சீக்கிரம்!... "

வீட்டுக்குள் சென்ற வெண்ணிலா மறு நிமிடமே மஞ்சள் தூளைக் கிண்ணத்தில் குழைத்துக் கொண்டு ஓடி வந்தாள்...

" நீ ஆட்டுக்கிட்ட உட்கார்ந்து அதுக்கு இதமா தடவிக் கொடு!.. " - என்றபடி புதிய வரவின் தொப்புள் கொடியை அகற்றி விட்டு கால் குளம்புகளைக் கிள்ளி நீக்கினாள் கஸ்தூரி...

" ஏம்மா ஆட்டுக்குட்டியோட காலை கிள்ளி விடுறே?... " வெண்ணிலாவின் வினா..

" இந்த மாதிரி கிள்ளி விடலேன்னா குளம்பு வளர்றப்போ வளைஞ்சிக்கும்... குட்டிக்கு நடக்க முடியாம இடைஞ்சலா ஆகிடும்... குளம்பை சீக்கிரமா கிள்ளி விடணும்... இல்லேன்னா இறுகிப் போய்டும்!... "

கஸ்தூரி சொல்லிக் கொண்டிருக்கையில் ஆடு ஒருக்களித்தபடி தலையைத் திருப்பி தன் குட்டியைப் பார்த்தது...

கஸ்தூரி குட்டியைத் தூக்கி எடுத்து அதனருகில் நீட்டினாள்.. ஆடு தன் குட்டியை முகர்ந்து பார்த்தது... நாவினால் நக்கிக் கொடுத்தது..

அதற்குள் வேப்ப மரத்துக் கிளையில் ' கா.. கா... ' என்றபடி - சில காக்கைகள் வந்து அமர்ந்தன...

காக்கைகள் போதாதென்று ' பரட்.. பரட்.. ' - என்று சாலையைத் தேய்த்தவாறு ஓடி வந்த மணியன் சற்று அருகாக அமர்ந்து கொண்டான்...

" இந்த மணிப்பயலை விரட்டு...ம்மா!.. " - என்றாள் கஸ்தூரி...

" அவங்க வீட்டு ஆடு தானே...ம்மா!.. " - என்றாள் வெண்ணிலா...

" அவங்க வீட்டு ஆடா இருந்தாலும் ஒரு சமயம் போல இருக்காது.. அடுத்த தெரு ரவுடிப் பசங்க வந்துட்டா ஒருத்தனுக்கு ஒருத்தன் சண்டை வந்திடும்... முதல்ல இந்த மணிப் பயலை விரட்டு!... "

" டேய்... போடா!.. " - என்று மணியனை அதட்டினாள் வெண்ணிலா..

மணியன் அங்கிருந்து எழுந்து ரெண்டடி தள்ளி அமர்ந்தான்...

" ஏய்!.. டெலிவரி ஆகிற எடத்துல உனக்கு என்னடா வேடிக்கை?... "
- என்று சத்தம் போட்டபடி கல்லெடுத்து எறியும் பாவனையில் கையைக் காற்றில் வீசினாள்..

அவ்வளவுதான்...

" லொள்!.. " - என்ற சத்தத்துடன் தலை தெறிக்க ஓடிப்போய் அந்த அரச மரத்துக்கு அந்தப் பக்கம் போய் நின்று கொண்டான்...

ஆனாலும் வாலை ஆட்டுவதை மட்டும் நிறுத்தவில்லை..

இதற்குள் பூமிக்கு வந்து சில நிமிடங்கள் கூட ஆகியிருக்காத இளங்குட்டி எழுந்து நிற்க முயற்சித்தது...

குட்டியின் தொப்புள் கொடியில் மஞ்சள் குழைவைத் தடவி துணியைக் கிழித்து வாட்டமாகக் கட்டி விட்டாள் கஸ்தூரி...

கைகள் பரபரத்தாலும் அவளது கண்கள் ஆட்டின் வயிற்றிலேயே இருந்தது...

" இன்னொரு குட்டியும் இருக்கு வெண்ணிலா!... "

சொல்லி முடிக்கையில் அந்தக் குட்டியும் வெளி உலகினை எட்டிப் பார்த்தது...

" அவ்வளவுதான்!.. " - என்று ஆடும் மெல்ல எழுந்து கொண்டது...
முதற்குட்டிக்கு செய்த மாதிரியே இந்தக் குட்டிக்கும் குளம்பு கிள்ளி விட்டு தொப்புள் கொடியில் மஞ்சள் வைத்துக் கட்டினாள் - கஸ்தூரி...

ஆடு தன் நாவினால் நக்கித் துடைத்தது போக குட்டிகளின் மீது எஞ்சியிருந்த ஈரத்தை எல்லாம் பழைய துணியினால் மெதுவாக ஒற்றியெடுத்த கஸ்தூரியின் முகத்தில் நிம்மதி பரவியது...

" ம்மே.. ம்மே!... " - என்று இளங்குரலெடுத்தன ஆட்டுக் குட்டிகள்...

ஒவ்வொன்றாக அள்ளியெடுத்த கஸ்தூரி வெண்ணிலாவிடம் ஒன்றையும் மலர்விழியிடம் ஒன்றையும் கொடுத்தாள்...

மூத்தவள் பத்திரமாக கையில் வாங்கிக் கொண்டாள்... இளையவளோ இப்படியும் அப்படியுமாகக் குதித்தாள்...

" க்யூட்.. ஸோ க்யூட்!... " - என்றபடி சிரித்தாள்.. சிலிர்த்தாள்...

" புள்ளைங்களை எறக்கி விடுங்கப்பா!.. " - என்கிற மாதிரி அவர்களின் மேல் உரசிக் கொண்டு நின்றது ஆடு...

அதற்குள் வீட்டுக்குள்ளிருந்து வெதுவெதுப்பான தண்ணீரில் மஞ்சளைக் கரைத்துக் கொண்டு வந்த கஸ்தூரி அந்தத் தண்ணீரால் ஆட்டின் இடுப்பையும் திரண்டிருந்த மடியையும் நன்றாகக் கழுவி விட்டாள்...

" சரி.. சரி... குட்டிகளைக் கொடுங்க!.. " என்றபடி குட்டிகளை வாங்கி - தாயின் மடியூட்டினாள்...



தாயின் மடியில் முகம் பதித்த குட்டிகள் மளுக்.. மளுக்.. என்று சுறுசுறுப்புடன் பால் குடிக்கத் தொடங்கிய வேளையில் -

" மகமாயீ... மகமாயீ!... " - செல்லம்மா ஓடி வந்தாள்...

இங்கிருந்து நாலாவது வீடு செல்லம்மாளுடையது.. பால் வியாபாரம்.. ரெண்டு நாட்டுப் பசுக்கள்.. கூடவே சில ஆடுகள்... கோழிகள்... கணவன் மனைவி பிள்ளைகளுமாக பார்த்துக் கொள்வதும் பராமரிப்பதும்...

" ரேசனுக்குப் போய்ட்டு வர்றதுக்குள்ளே... இந்தக் கதையா?... நான் காலைலயே கவனிச்சேன்... இன்னிக்குக் குட்டி போட்டுடும்..ன்னு.. அது என்னமோ மகராசி.. உங்கையால பேறுகாலம் ஆகியிருக்கு!... "

" செல்லம்.. ஒன்னும் கவலைப்படாதே... பேறுகாலம் பார்த்ததுக்காக காசு எல்லாம் கேக்க மாட்டேன்!.. " - கஸ்தூரி சிரித்தாள்...

" நீங்க வேணாம்..ன்னாலும் நான் உட்டுடுவேனா!.. மூனாம் நாள்..ல இருந்து பால் தெளிய வரைக்கும் சீம்பால் எல்லாம் உங்க ஊட்டுக்குத் தான்!... " என்ற செல்லம்மா அந்த இடத்தைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்....

" சீம்பால்... ன்னா என்னம்மா?... " - கேட்டார்கள் வெண்ணிலாவும் மலரும்...

" மடி சுரக்கிற முதல் பால் ...ம்மா!... கொஞ்சம் கெட்டியா இருக்கும்... ரெண்டு மூனு நாள்..ல தெளிஞ்சிடும்... ரொம்பவும் சத்து இது... திரட்டுப் பால்..ன்னு செய்வாங்க!... "

" எப்படிம்மா!... இதெல்லாம் எப்படிம்மா?... அம்மா..ன்னா சும்மா..ன்னு நெனைச்சிருந்தோமே!.. " பிள்ளைகளுக்கு ஆச்சர்யம்...

" கிராமத்துப் பொண்ணுங்களுக்கு இதெல்லாம் சர்வ சாதாரணம்...பசங்களா!.. ஒரு தடவை நானும் என்னோட சிநேகிதிகளும் நம்ம வீட்டுப் பசு கன்னு போடுறப்ப கூட இருந்து எல்லாம் செஞ்சிருக்குறோம்... தாத்தா பாட்டி வெளியூர்..ல இருந்து வந்ததும் விஷயம் தெரிஞ்சு எனக்கு ஒரு பவுன் மோதிரம் போட்டாங்க.. கூட இருந்த பொண்ணுங்களுக்கு பட்டுப் பாவாடை தாவணி எடுத்துக் கொடுத்தாங்க... எனக்குக் கைராசின்னு.. அக்கம் பக்கத்திலயும் கூப்பிடுவாங்க!... "

மெல்லச் சிரித்தாள் கஸ்தூரி..

" அம்மா.. த கிரேட்!.."

கஸ்தூரியைக் கட்டிக் கொண்டார்கள் பிள்ளைகள் இருவரும்..

" சரி.. தாயீ... மக்க மனுசாளோட நல்லாருக்கணும் நீங்க!... நான் போய்ட்டு நாளைக்கு சீம்பாலோட வரேன்!..."

குட்டிகளைத் தூக்கிக் கொண்டு செல்லம்மா நடக்க அவளைத் தொடர்வதற்கு யத்தனித்த ஆடு மெதுவாகத் திரும்பிப் பார்த்தது...

'' ம்மே.. ஏஏ!...''

பொருளடக்கம்

# எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்

## காசிக்குப் போகும் சம்சாரி




**அமெரிக்கா :** US (Amazon.com) LINK

2.

## அனுபவ பாடங்கள்



# கேள்விக்கென்ன பதில்?

## ஆசிரியர்களில் காசு சோபனா என்பவர் யார்?

**நெல்லைத்தமிழன் :**

**ஜோசியம் பார்ப்பதால் என்ன நன்மை? நீங்க ஜோசியம் பார்த்து பலித்த சம்பவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

# நான் எனக்காக ஜோசியம் பார்த்ததில்லை. என் திருமண சமயத்தின் போதுகூட என் தந்தையார் மேம்போக்காக ஜாதகங்களை பார்த்தது அன்றி ஜோசியரிடம் போனது இல்லை. ஆனால் எங்கள் அலுவலகத்தில் ஒரு பெண்மணி வந்து எல்லாருக்கும் ஜோசியம் சொன்னார்.

அதுகூட அவர் ஜாதகம் ராசி நட்சத்திரம் பார்த்து சொல்லவில்லை எல்லாரையும் ஒரு பூ , ஒரு மரம் , ஒரு கனி என்று சொல்லச் சொல்லி அதன் அடிப்படையில் சில ஜோசியங்கள் சொன்னார் . என் முறை வந்தபோது " வாழைப்பூ சவுக்கை மரம் பலாப்பழம் " என்று சொன்னேன். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு " நீங்க ஒரு ஃப்ரீக்" என்று சொல்லி விட்டு , எனக்கு ஒரு ஜோசியம் சொன்னார். அதாவது என் பிற்கால நாட்களில் நான் ஒரு லட்சாதிபதி ஆவேன் என்று சொன்னார் . அவர் அப்படிச் சொல்லும்போது இலட்சாதிபதி என்பது எல்லோருக்கும் எட்டாத கனவு. ஆனால் நான் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது லட்ச ரூபாய் என்பது கிட்டத்தட்ட எல்லோருக்கும் எட்டும் கனி ஆகிவிட்டது. ஜோசியம் பலிக்குமா இல்லையா என்பதை நீங்களே உறுதி செய்து கொள்ளுங்கள்.

& ஜோசியம் பார்ப்பதால் எந்த நன்மையையும் இல்லை. எது நடக்கவேண்டும் என்று நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறதோ அது நிகழ்ந்தே தீரும். பரிகாரம், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எல்லாம் பயனில்லாதவை. அவற்றால் கொஞ்சம் மன ஆறுதல் அடையலாம். அவ்வளவுதான்.
ஜோசியம் பார்ப்பவர்களில் காசுக்காகப் பார்ப்பவர்கள் பெரும்பாலும் சரியான பலன்கள் சொல்வது இல்லை. காசு சம்பாதிக்க என்ன சொல்லவேண்டுமோ அதை மட்டும் சொல்லி சம்பாதிப்பார்கள். என்னைப்பொறுத்தவரை நான் இதுவரையிலும் எனக்காக, காசு கொடுத்து எந்த ஜோசியமும் பார்த்ததில்லை. பொதுவாக பத்திரிக்கைகளில் வருகின்ற நாள் பலன், நட்சத்திரப் பலன், ராசி பலன், சனிப்பெயர்ச்சி, குருப்பெயர்ச்சி போன்ற பெயர்ச்சிப் பலன்கள் எல்லாவற்றையும் படிப்பேன். நல்ல பலன் சொல்லியிருந்தால் சந்தோஷப்படுவேன்.
இதுவரையிலும் வாழ்க்கையில் எனக்குத் தெரிந்து, சனிப்பெயர்ச்சி தாக்கம் மட்டும் , நல்லதோ கெட்டதோ - எனக்கு ஓரளவுக்கு சரியாக நடந்து வருகிறது.

**தினமும் பத்தாயிரம் தப்படி நடக்கணும், ஓட்ஸ் சாப்பிடுவது நல்லது, சாதம் சாப்பிடுவது வெறும் கார்ப், பயனில்லை என்று யாரோ நாம் என்ன செய்யணும்னு இயக்குவது போலத் தெரியலையா?**

# அப்படியும் எடுத்துக் கொள்ளலாம்தான் என்றாலும், இந்த மாதிரி ஆலோசனைகளில் ஓரளவு பயன் உண்டு . அதற்கு ஓர் அடிப்படை உண்டு என்பதும் உண்மைதானே. தெரிந்தோ தெரியாமலோ உடல் பயிற்சி செய்கிறோம், ஓரளவு ஆரோக்கியமான உணவை உண்கிறோம் என்பதால் நல்லது நடப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இருந்துவிட்டுப் போகட்டுமே.

& சொல்பவர்கள் ஆயிரம் சொல்லட்டுமே! 'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் ..... '
என்னைப் பொருத்தவரையிலும் உணவு வகைகளில், எது வாய்க்குப் பிடித்திருக்கிறதோ, மனதுக்குப் பிடித்திருக்கிறதோ அதை அளவோடு சாப்பிட்டு அதோடு நிறுத்திக்கொள்வேன். தினமும் குறைந்தது மூன்று கிலோமீட்டர் தூரம் நடப்பேன். அவ்வளவுதான்.

**ஆசிரியர்களில் காசு சோபனா என்பவர் யார்?**

#, $ & *: இது என்னங்க, இவ்வளவுநாள் கழிச்சு உங்களுக்கு இப்படி ஒரு சந்தேகம்? ஆசிரியர்களில் காசு சோபனா என்பவர் காசு சோபனாதான்!

**நீத்தார் கடன் என்பது தர்ப்பணங்கள், ச்ராத்தம் இவைகளைக் குறிக்கிறதா?**

# ஆம் . மற்றபடி ஒருவர் இறந்த உடனே அவருக்குச் செய்யப்படும் காரியங்களை அபரக் கிரியை அல்லது நீத்தார் கடன் என்று குறிப்பிடுகிறோம்.

**எபி வாசகர்கள் ஆசிரியர்கள் சந்திக்க எப்போது வாய்ப்பு உண்டு? எந்த சந்தர்ப்பம்?**

# தொற்று தொடரா நன்னாள் வரக் காத்திருப்போம்.

**மதம் வளர வளர, சனாதன தர்மத்தில் தெய்வங்கள் அதிகமாகினவா இல்லை அவரவர் தங்கள் மனதிற்கேற்ப தெய்வங்களை உருவகப்படுத்தினரா?**

# தனிமனிதர் ஒருவர் "தெய்வம்" ஒன்றை உருவகித்து "வளர" விடுவது அசாத்தியமாகவே படுகிறது. எனினும் விஷ்ணு, துர்க்கை என தெய்வ வடிவங்கள் எப்படி முதலில் உருவகிக்கப்பட்டன என்பது சிந்தனையைத் தூண்டும் வினா. வேதத்தில் குறிப்பிடப் படவில்லை என்று சொல்லக் கேள்வி. இதை ஆராய்ச்சி செய்ய சாத்தியக்கூறுகள் உண்டா என்று தெரியவில்லை.

& கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர். ஐம்புலன்களால் உணரப்படும் பொருட்கள் எல்லாவற்றுக்கும் ஒரு பெயரும், வடிவமும் கொடுத்துவிடுவது, அவற்றை மனதில் இருத்திக்கொள்வதற்கு எளிமையான வழி. அதே வகையில் படைப்பாளிகள் சிலர், ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட சக்திக்கும் பெயர், வடிவம் என்று உருவகப்படுத்தினர். கேட்டவர்க்கு கேட்டபடி கண்ணன் வந்தான், கேள்வியே பதிலாக கண்ணன் வந்தான் - கண்ணன் வந்தான் 'மாய'க்கண்ணன் வந்தான்! (இன்னும் விளக்கமாக எழுதலாம். படிப்பவர்கள் ஓடிவிடுவார்கள்!)

அதிகாலை நடைப்பயிற்சிக்கு போகும்போது அனேகமா யாரும் இருக்க மாட்டாங்க அல்லது 20 அடிக்கு மேல் தள்ளி இருப்பாங்க. அப்போ மாஸ்க் போடணுமா? சுத்தமான காற்றை சுவாசிப்பது முக்கியம் இல்லையா?

* ஜாகிங், நடைப்பயிற்சி செய்யும்போது மாஸ்க் போடக்கூடாது என்றுதான் மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் செல்லும்போது ஒருவர் பின் ஒருவராகச் செல்லாமல் அருகருகே இடைவெளி விட்டுச் செல்லவேண்டுமாம். இல்லாவிட்டால் முன்னால் போகிறவர் மூச்சுக்காற்று பின்தங்கி பின்னால் வருபவரை பாதிக்குமாம்.

# மாஸ்க் முன்னெச்சரிக்கை நடவடிக்கை. எனவே வெளியில் கால் வைத்தால் மாஸ்க்.
(இது போன்ற கேள்விகளுக்கு நம்பகமான பதிலளிக்க நம் போன்றவர்களுக்குத் தகுதி இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.) மாஸ்க் மூச்சுக் காற்றை மாசு படுத்தாது.

( *ஆனால் கார்பன் டை ஆக்ஸைடு சுழற்சியை அதிகரிக்கும். யாரும் அருகில் இல்லாவிடில் கொஞ்சநேரம் மாஸ்க்கை விலக்கி வெளிக்காற்றை சுவாசியுங்கள். இல்லாவிட்டால் தலை கிறுகிறுப்பு, லேசான தள்ளல் போன்ற மயக்கங்கள் வரலாம்)

& எனக்கு சாதாரண 'washable type' முககவசம் அணிந்து நடைப்பயிற்சி செய்வது வழக்கமாகிவிட்டது. சமூக இடைவெளியும் கடைபிடிக்கிறேன். இந்த வகை முககவசத்தால் கொ தொ வை விலக்க இயலாது என்று நன்றாகத் தெரியும். ஆனால் அதை அணிவது எதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறேன். முகத்தை அடிக்கடி தொடும் பழக்கம் என்னிடம் எப்போதும் உண்டு. மாஸ்க் அணிந்திருக்கும் நேரங்களில் முகத்திற்கு அருகே கை தன்னிச்சையாக கூட செல்லாது. மேலும் கையால் எதையும் தொடாமல் இருப்பதற்கு ஒரு ஜாக்கிரதை உணர்வு, மாஸ்க் அணிந்திருக்கையில் வருகின்றது. ஆகவே, நடைப்பயிற்சி நேரத்தில், முககவசம் அணிவது, என்னைப் பொறுத்தவரை மிகவும் நல்லது.

பொருளடக்கம்

# விடாக்கொண்டர் கொடாக்கண்டர் கேஜிஜி !!

அது 2013 ஆம் வருடம்! மே மாதம் முப்பதாம் தேதி. அதற்கு முந்தைய நாளோ என்னவோ ரிஷபன் ஜி ஒரு கவிதை வெளியிட்டிருந்தார். அது என்ன என்று எனக்கு நினைவில்லை. உடனே நான் இதை எழுதி வெளியிட்டேன் - ரிஷபன் ஜிக்கு நன்றியுடன்.

பாசம் மறந்த

இலைகள்

மரத்தை விட்டுப்
பிரிந்தாலும்
வாசம் போவதில்லை!

(ஒரு கவிதையைப் படித்தால் நமக்குள்ளும் ஏதாச்சும் எழுதத் தோன்றும். அப்படி ஒரு கவிதை இது. ஆனால் அது போல இது இல்லை !) நன்றி ரிஷபன் ஜி!


Sriram Balasubramaniam
May 30, 2013 at 7:55 PM ·

பாசம் மறந்த
இலைகள்
மரத்தை விட்டுப்
பிரிந்தாலும்
வாசம் போவதில்லை!

(ஒரு கவிதையைப் படித்தால் நமக்குள்ளும் ஏதாச்சும் எழுதத் தோன்றும். அப்படி ஒரு கவிதை இது. ஆனால் அது போல இது இல்லை !) நன்றி ரிஷபன் ஜி!

K G Gouthaman, Rishaban Srinivasan and 7 others · 31 Comments

K G Gouthaman இலைகள்? வாசம்? எங்கேயோ இடிக்குதே தலைவா!
Like · Reply · See Translation · 7y · 1

K G Gouthaman எனக்குத் தெரிந்து யுகலிப்டஸ் மரஇலைகளுக்கு மட்டுமே இயற்கையில் மணம் உண்டு.
Like · Reply · See Translation · 7y · 2

Rishaban Srinivasan ஹா ஹா எனக்கேவா.. 🙂
Like · Reply · See Translation · 7y · 1

**"ஹா ஹா எனக்கேவா.." என்று சிரித்தார் ரிஷபன் ஜி.**

**" நல்லபடி எடுத்துக் கொண்டதற்கு நன்றி ரிஷபன் ஜி!" என்று பூரித்துப் போனேன்.**

**" யூ ஆர் ஆல்வேஸ் வெல்கம் " என்று பெருந்தன்மை காட்டினார் ரிஷபன் ஜி.**

**அப்புறம் வந்தார் கேஜிஜி. என்னை உண்டு இ(ல்)லை என்று ஆக்கிவிட்டார். நீங்கள் எல்லாம் 'வாசம்' என்பதை மரத்தின் மீதான தொடர்பு, பற்று என்று எடுத்துக்கொண்டு**

(இது இப்போது தோன்றிய சமாளிப்பு!! ஹிஹிஹிஹி....) போனால் போகிறது என்று விட்டு விடுவீர்கள் இல்லையா? இவர் விடவில்லை.

"இலைகள்? வாசம்? எங்கேயோ இடிக்குதே தலைவா! எனக்குத் தெரிந்து யுகலிப்டஸ் மர இலைகளுக்கு மட்டுமே இயற்கையில் மணம் உண்டு." என்றார் நவீன நக்கீரராய் மாறி.

'என்னடா இது கவிதைக்கு வந்த சோதனை' என்று எண்ணி நான் சமாளிக்கத் தலைப்பட்டேன்.

"ஹலோ.... இப்படியெல்லாம் கேள்வி கேட்கப் படாது... ஆமாம் சொல்லிட்டேன்! யுகலிப்டஸ், மாவிலைல வாசம் நுகர்ந்தது இல்லை?" என்றேன்.

"பழமொழி.. கவிதை .. சொன்னா அனுபவிக்கணும்.. கேள்வி கேட்கக் கூடாது" என்று துணைக்கு வந்தார் ரிஷபன் ஜி.

"மாவிலைக்கு வாசம் கிடையாது. பறிக்கும் பொழுது வருகின்ற வாசம் – மரத்தில் வடியும் மாம்பாலில் வருகின்ற வாசம்." கே ஜி ஜி. அவர் விடுவதாயில்லை.

நானும்!

"இதோ பாருங்க கே ஜி ஜி... இதுக்காக கவிதை (தானே இது?)யை எல்லாம் திரும்ப வாங்க முடியாது! இலை கீழே கிடந்தால் எடுத்து முகர்ந்து பார்த்து என்ன மரத்தின் இலை என்று சொல்லி விட முடியும்! (இவ்வளவு விளக்கம் கொடுக்க வச்சுட்டீங்களே!) ரிஷபன் ஜி சொல்லியிருக்கற மாதிரி ஆராயக் கூடாது...."

"கவிதை, விதை, கதை - எல்லாவற்றையும் ஆராய்ந்தே தீருவேன்!!" - ஆனாலும் பிடிவாதம் கேஜிஜிக்கு.

பொறுமை இழந்தேன்!!!! நம்பியாராய் மாறினேன். இரண்டு உள்ளங்கைகளையும் குறுக்காய்ச் சேர்த்துப் பிசைந்தேன். என் உதடு கோணியது புருவங்கள் நெறிந்தன. கண்கள் விட்ட்டத்துக்கும் மேலே எங்கோ பார்க்க,

"மாயாண்டி... ஆட்டோவைக் கூப்பிடு!"

நான் கேஜிஜியை மிரட்ட ஆட்டோ கூப்பிட, நான் எஸ்கேப் ஆவதாய் நினைத்து விட்டார் ரிஷபன் ஜி. அவர் உடனே,

"ஸ்டாப்.. மீ ஆல்ஸோ கமிங்.." என்றார்.

"இலையை அதன் ஷேப் அண்ட் சைஸ் பார்க்காமல், கண்களைக் கட்டிக் கொண்டு (யூகலிப்டஸ் தவிர) அது எந்த மரத்தின் இலை என்று கேஜீ உட்பட யாராலும் கண்டுபிடிக்க முடியாது." இப்போது கேஜிஜி கேஜியையும் (ஞாயிறு புகைபப்டாப் பதிவாளர்) உள்ளே இழுத்தார்.

நான் என் அடுத்த சமாளிப்பை எடுத்தேன்.

"கே ஜி ஜி... "கண்ணுக்கு மையழகு..." அடுத்த வரி என்னன்னு சொல்லுங்க பார்ப்போம்! உங்களுக்குத் தெரியாதுன்னு நினைக்கறேன்!" தூண்டி விட்டேன்.

"பொய் வேறு, முரண் வேறு." பிங்க் அமிதாப்பாய் நின்றார் கேஜிஜி.

எதிர்பாராமல் எனக்கு கேஜிஎஸ்ஸிடமிருந்து கொஞ்சம் ஆதரவு கிடைத்தது. அவர் சொன்னார் :

"எலுமிச்சை, நாரத்தை, வேம்பு, வெற்றிலை, புதிநா கல்பூரவல்லி, இப்படி செடியோ கொடியோ, மரமோ எதிலிருந்து வந்திருந்தாலும் கண்டு கொள்ள

முடியும் ! மரம் சந்தன மரமோ ? இலை உதிர்ந்தாலும் மரத்தின் வாசனை போகாமல் இருக்க ?"

கேஜிஜி அவரையும் எதிர்க்கட்சியில் உடனடியாகச் சேர்த்தார்! "எலுமிச்சை நாரத்தை - இரண்டும் ஒரே வாசம்தான் வீசும். சந்தனமரம் பட்டுப் போனபின் தான் வாசமே வரும். இலையோடு இருக்கும் பொழுது வாசம் நஹீ"

கேஜிஎஸ் : "எங்கள் வீட்டில் *lemon naaraththai* இரண்டும் இருக்கிறது - சற்று வேறுபாடும் தெரிகிறது. அப்போ சந்தன மரத்தை வெட்டி விற்பவர்கள் விறகுக்கா விற்கிறார்கள்?"

கேஜிஜி : "இலையை கண்களால் பார்க்காமல், கண்களைக் கட்டிக் கொண்டு இனம் காண முயற்சி செய்யுங்கள்."

கேஜிஎஸ் : "முகரலாமா கூடாதா?"

கேஜிஜி :"ரலாம்"

கேஜிஎஸ் : *":if the leaves have any essential oil like geranium basil, viboothip pachchai marik kozhundhu etc, one need not even make an effort to smell"*

கேஜிஜி : "மருக்கொழுந்து, விபூதிப் பச்சை இலைகள் கூட, கசக்கி முகர்ந்தால் - பச்சை வாடை மட்டுமே வரும்"

கேஜிஎஸ் : "எல்லா விளக்கும் விளக்கல்ல என்பது போல என் போன்றோருக்கு எண்ணெய் பசை உள்ள இலையே இலை"

அப்புறம் கழுகு சித்தர் என்ற ஃபேஸ்புக் நண்பர் "சார் ஒரு சாலையின் காட்சியை தத்ரூபமாக ஒரு படம் போல எழுத்துக்களால் காட்டிவிட்டீர்கள் . அடுத்து என்னவோ. குருவி ராமேஸ்வர பணியும் நடக்கிறதல்லவா?" என்றும்

ஸ்விஸ் கவிதாயினி ஹேமா "விழுந்தாலும் காலடியில் கிடப்பதே தவம் !" என்றும் சொன்னதுடன் அன்றைய அந்த அனல் பறக்கும் விவாதம் முடிவுக்கு வந்தது!

இப்படித்தாங்க... முன்பெல்லாம் ஃபேஸ்புக்கில் இப்படி வெட்டி அரட்டை எல்லாம் நடத்தி இருக்கோம். சினிமா படப்புதிர் எல்லாம் விளையாடி இருக்கோம். அனன்யா மகாதேவன், கீதா அக்கா, ஶ்ரீனிவாசகோபால மாதவன், இன்னும் சிலர் என்று ஒரு குழு கூடும் அங்கு!

================================

கடந்த ஏப்ரல் மாதம் ஃபேஸ்புக்கில் பகிர்ந்த உல்டாப் பாடல் ஒன்று! இதை எனக்கு பாடி அனுப்பி இருந்தார் மாதவன். அவருக்கு இது சினிமாப பாடலின் உல்டா என்று தெரிந்திருக்கவில்லை. கானாப்பாடல் போல பாடி அனுப்பி இருந்தார். ஆனால் அவரும் அறியாமல் ஒரிஜினல் பாடலின் ட்யூனின் சாயல் அதில் தெரிந்தது!



தனியாய் இருக்கக் கத்துக்கணும் இந்த
உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்
காக்காவைக் கொஞ்சம் பாருங்க அதுக்குக்
கத்துக் கொடுத்தது யாருங்க. . .

வீட்டை விட்டு வெளில வந்தா 'நாலும்' நடக்கலாம்
அந்த 'நாலும்' தெரிஞ்சு நடந்துகிட்டா
நல்லாயிருக்கலாம்..
உன்னைக் கேட்டு என்னைக் கேட்டு
எதுவும் நடக்குமா.. – அந்த
'ஒன்று' நடத்தும் நாடகத்தை
நிறுத்த முடியுமா.. (தனியாய்)

கொஞ்ச மாதம் கொரோனா வந்து
ஓய்ந்து போகலாம் – வாழ்வில்
கூடிவரும் தீமைகளும்
தீர்ந்து போகலாம்.
நேற்றுவரை நடந்ததெல்லாம்
இன்று மாறலாம் – நாம்
தனிமையிலே நடந்து சென்றால்
நன்மை அடையலாம்... (தனியாய்)

தன்னைப் போல பிறரை எண்ணும்
தன்மை வேண்டுமே – அந்தத்
தன்மை வர உலகத்திலே
தனிமை வேண்டுமே
நோயை வாங்கிப் பரப்புவதால்

# ஆவதொன்றில்லை – நாம்
# வாயை மூடி 'உள்'ளிருந்தால்
# நன்மை வேறில்லை (தனியாய்)

## கண்முன்னே நிகழ்ந்த விபத்து!

**Sriram Balasubramaniam**
April 29 ·

நேற்று காலை என்னைத் தாண்டிச்சென்ற இந்த ஆட்டோவும் வேகத்தைக் குறைக்கவில்லை. அந்த ஜங்ஷனில் இடது புறத்திலிருந்து வந்த இந்த ட்ரக்கும் வேகம் குறையவில்லை! நாம் வேகமாய்த் தாண்டி விடுவோம் என்கிற குருட்டு நம்பிக்கை போலும். விளைவு "டமார்"

அதிகாலை. அவர்களுக்குள் வார்த்தையாடத் தொடங்கிய நேரம் தாண்டிச் சென்று விட்டேன். நல்லவேளை, உயிர்ச் சேதம் ஏதும் இல்லை. காயம் கூட பட்டிருக்காது என்றே நம்புகிறேன்.

ஊரடங்கின் மூன்றாவது நாளோ, நான்காவது நாளிலோ இதே இடத்தில் காய்கறிகளுடன் ஒரு ட்ரக் விழுந்து கிடந்தது!

போக்குவரத்தே (அதிகம்) இல்லாத நேரம்தான் இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.



பொக்கிஷம் பகுதியில் சில தமிழ்வாணன் கதைகள்! இவற்றில் எதை எதை நீங்கள் படித்திருக்கிறீர்கள்? எதனெதன் கதை உங்களுக்கு நினைவில் இருக்கிறது? அவர் கதைமாந்தர் பெயர்கள் எல்லாம் தமிழ்ப் பெயர்களாகவே இருக்கும். நீலக்கண்ணி, கூர்விழி, ஒப்பிலான், செம்மேனி... இவரது ஆஸ்தான துப்பறிவாளர் சங்கர்லால். அவருக்கு தேநீர் ரொம்பவும் பிடிக்கும். கழுத்துப்பட்டையை தளர்வாக்கிக்கொண்டு மேசை மேல் கால்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டு ஓய்வெடுப்பார், புத்தகம் படிப்பார்! அவருக்கு உதவி செய்யும் போலீஸ் அதிகாரியின் பெயர் வஹாப். அவர் வீட்டு சமையல்காரன் மாது... கத்தரிக்காய் என்று கூட ஒரு கேரக்டர் உண்டு என்று நினைவு. மர்ம மனிதன் என்கிற கதையில் சங்கர்லாலுக்கே டூப் உண்டு! கருகிய கடிதம் என்கிற கதையில் லேசர் ஹோலோக்ராம் பிம்பம் பற்றியெல்லாம் எழுதி இருப்பார். பின்னர் சங்கர்லாலுக்கு தேநீர் செலவு செய்து கட்டுப்படி ஆகவில்லை என்று (!!) க்ளூகோஸ் மாத்திரை மட்டும் சாப்பிட்டுக்கொண்டு தமிழ்வாணனே துப்பறிய வந்தார்!

படித்திருக்கிறேன் என்றாலும் கதை சரியாய் நினைவில்லை. பெரும்பாலும் இவர் கதைகளுக்கு வர்ணம்தான் ஓவியர்.



# மலையில் மறைந்த மனிதன்


14

## நடுவிரலை வைத்துதான் கதையின் சஸ்பென்ஸ் உடையும்.


நடு விரல்
தமிழ்வாணன் எழுதிய
மர்மத் தொடர் கதை

ஜப்பானில் மக்கள் தொடுவது எல்லாம் மஞ்சள் நிறமாக, அங்கு ஓய்வெடுக்க வந்த சங்கர்லால் துப்பறிவார். இப்போ இருந்திருந்தால் வூஹான் மர்மத்தை துப்பறிந்து ' பூ' என்று ஊதி இருப்பார்!




ஆறு அழகிகள்
தமிழ்வாணன்
ஆறு அழகிகள்
19





**இதில் நாம் வில்லன் என்று நினைக்கும் துரைப்பாண்டிதான் கதாநாயகன்!**

# கைதி நம்பர் 811

தமிழ்வாணன்






நீலக்கண்ணி தொலைபேசியில் சொல்லழகனை அழைத்துப் பேசிய போது சொல்லழகன் வியப்புமிக்க கொண்டான்.

"யாரது? அத்தையா? என்ன அத்தை, நீங்கள் தொலைபேசியில் இதுவரையில் என்னை அழைத்ததே இல்லையே! என்ன வேண்டும்? சொல்லுங்கள்" என்றான்.

"உடனே உன்னிடம் பேச வேண்டும்! நேரில் புறப்பட்டு வா!" என்றாள் நீலக்கண்ணி.

"இப்போதா? நிறைந்த வேலைகள் இருக்கின்றன. அப்பாவுக்கு வேறு உடம்பு மிகவும் சரியில்லை! தொலைபேசியிலேயே சொல்லுங்கள்!"

"தொலைபேசியில் சொல்லுவது நல்லதல்ல. உடனே புறப்பட்டு வா. மலர்விழி அவள் தோழியைப் பார்க்கப் போயிருக்கிறாள். அவள் திரும்பி வர இரண்டு மணி நேரம் ஆகும். அவள் வருவதற்குள் நீ வந்து போ: இரகசியமாக உன்னிடம் பேச வேண்டும். உடனே புறப்பட்டு வா!"

"மலர்விழிக்குத் தெரியாத இரகசியம் அப்படி என்னவோ?" என்றான் சொல்லழகன்.

"புறப்பட்டு வா சொல்லுகிறேன்:" என்று சொல்லிவிட்டுத் தொலைபேசியை வைத்துவிட்டாள் நீலக்கண்ணி.

அவன் திரும்பிப் பார்த்தபோது



================================

**டீஸர் 2:**

## விரைவில் வெளியாகவிருக்கும் அப்பாதுரையின் ஜூல் கதையிலிருந்து சில வரிகள்....

.............. விபரீத ஊளையோடு ஜூல் தாவியோடினான். ரீனா அவனை அடக்கிக் கட்டி விளையாடினாள். இந்தக் குலாவல் அடங்க இரண்டு நிமிடம் அமைதி காத்தேன். "ஜூல் இன்னும் என்னை மறக்கவில்லை" என்றாள். என்னருகே வந்து "நானும் உன்னை மறக்கவில்லை" என்று உரசினாள்.

"அதற்குத்தான் இந்தக் கொரில்லாவுடன் ஓடினாயா?" என்றேன்.

"யு மீன் நிவா? சேசே. நிவா என் காதலியில்லை. ஒரு கட்டாயத்தின் பேரில் கூட்டாளி, அவ்வளவுதான். நீ உதவினால் நிவாவின் பிடியில் இருந்து விடுபட்டு என் காதலியுடன் மறுபடி சேர்ந்திருக்க முடியும்"

"நான் ஏன் உனக்கு உதவ வேண்டும்?"

"மூன்று காரணங்கள்" என்றாள். "உன்னால் உதவ முடியும் என்பது முதல். உன்னால் மட்டுமே முடியும் என்பது இரண்டாவது"

"மூன்றாவது?"

"நீ உதவாவிடில் நிவா என்னையும் என் காதலியையும் கொன்று விடுவாள்"

சிரித்தேன். "கேள்வியை நான் சரியா கேட்கலை போல. உனக்கு உதவுறதால எனக்கு என்ன லாபம்?"

அசலில் தீவிரமானாள் ரீனா. "உனக்கு நிவாவைத் தெரியாது. அடியாள் பலம், போலீஸ் நெருக்கம், அரசியல் அண்மை.. எல்லாம் உண்மை. நினைத்தால் அரைக் கணத்தில் உன்னைக் கரப்பான் போல அடித்து நசுக்கித் தேய்த்து விடுவாள்"...............

# வீடியோ : நிலை மயங்கி மயங்கி காலமெல்லாம் கானம் பாடுவோம்

**சென்ற வாரம் விட்டுப்போன (கொஞ்சம் தாமதமாக எங்களுக்கு அனுப்பப்பட்ட) 'ஹாப்பி பர்த்டே எங்கள் ப்ளாக்' வீடியோ முதலில் ...**

சுட்டி : >> (திரு துளசிதரன் அவர்கள் )

**இந்த வார, இன்றைய பிறந்தநாள் வாழ்த்து வீடியோ அடுத்தது! (Happy Birthday Sriram - Video)**

**CLICK HERE To See the video**

=============== X ==============

**சென்ற வாரத்தின் தொடர்ச்சியாக இந்த வாரமும் தேன் நிலவு பாடல்கள்.**



**சுசீலாம்மாவுடன் ஏ எம் ராஜா பாடி இருக்கும் பாடல். மிகவும் உற்சாகமாக ஆரம்பிக்கும் இசையுடன் பாடல் துவங்குகிறது. அதிலேயே இளமையின் துள்ளல்**

இருப்பது போல தோன்றும். கொஞ்சும் குரலில் ஏ எம் ராஜாவும், இனிய குரலில் சுசீலாம்மாவும்...

ஜெமினிக்கு மிகவும் பொருத்தமான குரலாக அறியப்பட்டவர் ஏ எம் ராஜா. பின்னர் பி பி ஸ்ரீனிவாஸ் குரலும் ஜெமினிக்குப் பொருந்தியது.

இன்று பகிர்ந்திருக்கும் இரண்டு பாடல்களுமே என் மாமா ஒருவருக்கு மிகவும் பிடித்த பாடல்கள். அவர் அடிக்கடி பாடிக்கொண்டே இருக்கும் பாடல்கள்.



**சின்னச்சின்ன கண்ணிலே வண்ண வண்ண ஓவியம்**
**அங்குமிங்கும் யார் வரவைத் தேடுது - துணை**
**இங்கிருக்க யாரை எண்ணிப் பாடுது?**

**அல்லித்தண்டு போலவே**
**துள்ளி ஆடும் மேனியை**
**வெள்ளி நிலா**
**அள்ளிக்கொண்டதோ...அதில்**
**புள்ளி மயில் பள்ளிக்கொண்டதோ**

**புள்ளி போடும் தோகையை**
**வெள்ளி வண்ண பாவையை**
**அள்ளிக்கொண்டு போகலாகுமோ..நீயும்**
**கள்வனாக மாறலாகுமா**

**பின்னி வைத்த கூந்தலில்**

## மின்நிலா 008

**முல்லை பூவை சூடினால்**
**கன்னி நடை பின்னல் போடுமா....சிறு**
**மின்னலிடை பூவை தாங்குமா**

**கன்னி உந்தன் கையிலே**
**அன்னம் போல சாய்ந்து கொள்ளுவேன்....அதில்**
**அந்தி பகல் பள்ளிக்கொள்ளுவேன்**

**SONG YOUTUBE LINK**

ஸ்ரீதர் தான் படமெடுக்கும்போது ஏ எம் ராஜாவுக்கு வாய்ப்பளிப்பதாய் சொல்லி இருந்தார். கல்யாணப் பரிசு படத்தில் அந்த வாக்கை நிறைவேற்றவும் செய்தார். பின்னர் விடிவெள்ளியில் இணைந்து பணியாற்றினாலும், இந்தப் படத்தில் இருவருக்குள்ளும் பிளவு/பிரிவு ஏற்பட்டது. பின்னணி இசை சேர்க்காமல் கொஞ்சகாலம் முரண்டு பிடித்தாராம் ராஜா. அப்புறம் ஒரு சிறு பிரிவுக்குப் பின் நெஞ்சில் ஓர் ஆலயம் படத்தில் இசை அமைக்க மீண்டும் ராஜாவை ஸ்ரீதர் அழைத்தும் அவர் வர மறுத்து விட்டாராம். மெல்லிசை மன்னர்கள் அந்தப் அப்படத்துக்கு இசை அமைத்தார்கள்.

மிகவும் திறமை பெற்றிருந்த ஏ எம் ராஜா தனது குண நலன்களால் அதிகப் படங்களுக்கு இசை அமைக்க முடியாமல் போனது ரசிகர்களுக்கு நிச்சயம் இழப்புதான்.

படகு துழா/ளாவும் ஓசையுடன் இசை ஆரம்பிக்கிறது. பாடல் முழுவதும் அது தொடர்கிறது. முடியும்போதும்...!

படகில் போய்க்கொண்டே பாடும் பாடல்கள்தான் எத்தனை பார்த்திருக்கிறோம்? கிட்டத்தட்ட அத்தனையுமே ஹிட் பாடல்கள்.



**இந்தப் பாடலில் சுசீலாம்மாவின் குரல் சிறு பிள்ளையின் குரல் போல கொஞ்சுகிறது. பல்லவி, சரண முடிவுகளில் ஒரு இணைக்கும் இசை!**

நிலவும் மலரும் பாடுது
என் நினைவில் தென்றல் வீசுது
கண் மயங்கி மயங்கி காதலினால் ஜாடை பேசுது

சிரித்து சிரித்து உறவு வந்தால் நிலைத்து வாழுமா
தந்தை பிரித்து பிரித்து வைப்பதனால் காதல் மாறுமா
மனதினிலே பிரிவுமில்லை மாற்றுவாரில்லை
நிலை மயங்கி மயங்கி காலமெல்லாம் கானம் பாடுவோம்

முகத்தை முகத்தை மறைத்துக்கொண்டால் பார்க்க
முடியுமா
கணை தொடுத்து தொடுத்து மிரட்டும் கண்ணால்
பார்க்கலாகுமா மலர்முடிப்போம் மணம் பெறுவோம்
மாலை சூடுவோம்
நிலை மயங்கி மயங்கி காலமெல்லாம் கானம் பாடுவோம்

**SONG YOUTUBE LINK**

# சுவாரஸ்ய மனிதர்கள்

எங்கள் குடும்பத்தின் இளைய தலைமுறை படைப்பாளிகளில் ஒருவர் அருண் ஜவர்லால்.

பன்முகத் திறமைகள் வாய்ந்தவர். எங்கள் குடும்ப நிகழ்ச்சிகளில் அவரைப் பாடச்சொல்லி கேட்கின்ற உறவின ரசிகர்கள் ஏராளம். அவருடைய இளவயதில் சன் டி வீ சூப்பர் சிங்கரில் பங்கேற்று ( A V ரமணன் காலம்) பாடியவர். சமீப காலங்களில், ஸ்முல் தளத்தில் பல பாடல்கள் அவர் பாடி பதிவு செய்துள்ளார்.


பொறியியல் பட்டதாரி, தனியார் துறையில் வேலை, பட விமரிசகர், பாடகர், ஓவியர்! இங்கே நான் சொல்லியிருப்பவை கொஞ்சமே! (இன்னும் எனக்குத் தெரியாத திறமைகள் பல இருக்கும் அவரிடம்!)

சமீபத்தில் அவர் வரைந்து முகநூலில் வெளியிட்டுள்ள படம் ஒன்றை இங்கே உங்களுக்காக வெளியிடுகிறேன்.
கண்டு ரசியுங்கள்.

அவருடைய பன்முகத் திறமைகளை காணவேண்டும் என்றால் நீங்கள் அவருடைய முகநூல் பக்கங்களில் காணலாம்.

அவருடைய முகநூல் பக்கம் : **arunjawar**

அவர் வரைந்துள்ள படம், அடுத்த பக்கத்தில் ...(*Inspired by the works of Ranganath Krishnamani – "arunjawar"*)




## பொருளடக்கம்

# பாசிடிவ்

**1) சிறிய கண்டுபிடிப்புகள் பெரிய கண்டுபிடிப்புகளுக்கு முதல்படி...** **கோவை** அரசு மருத்துவ கல்லூரி மாணவர் பன்னீர் செல்வம், **முக கவசம், ஸ்டெதஸ்கோப், மொபைல்போன் உள்ளிட்ட பொருட்களை கிருமி நீக்கம் செய்யும் கருவியை கண்டுபிடித்து அசத்தியுள்ளார்...**



2) ( அ ) உள்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி மருந்து, இந்தியாவின், 74வது சுதந்திர தினமான, ஆக., 15ல் அறிமுகமாகிறது. **இதன் மூலம், உலகில் முதன் முதலாக கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடித்த பெருமையை, இந்தியா பெறும் என, எதிர்பார்க்கப் படுகிறது.** [ **இப்படி அவசரப்படவேண்டாம் என்று** ICMR **சொல்லி உள்ளது. மனிதர்கள் மீளாத சோதனைக்கு ஆறுமாதம், எட்டு மாதம் தேவைப்படும் எனவும், இது மிகவும் குறுகிய கால சோதனை எனவும் ஆபத்தான பின் விளைவுகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று அந்த அமைப்பு**

கூறியுள்ளது. ஆயினும் அறிவிப்பில் மாற்றம் எதுவும் இதுவரை இல்லை ]




( ஆ ) ஐதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம், ஐ.சி.எம்.ஆர்., மற்றும் புனே தேசிய வைராலஜி நிறுவனத்துடன் இணைந்து 'கோவாக்சின்' என்ற நாட்டின் முதல் கொரோனா தடுப்பு மருந்தை கண்டுபிடித்துள்ளது.

இது குறித்து அதன் தலைவர் கிருஷ்ண எல்லா அளித்த பேட்டி;



3) இந்த புதிய தொழில்நுட்பம் கொரோனாவின் காற்றில் பரவுவதற்கு எதிரான முதல் வரிசையில் தடுப்பை வழங்குகிறது. மேலும் தற்போதைய தொற்றுநோயையும், உட்புற சூழல்களில் எதிர்காலத்தில் ஏற்படும் எந்தவொரு காற்றில் பரவும் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கான தொழில்நுட்பங்களில் முன்னணியில் இருக்கும் என மற்றொரு இணை ஆசிரியரான பைசல் சீமா கூறினார்.



**4) சென்னை தி.நகர் பகுதியில் தனிமையில் வசித்து வந்த ௮0 வயது மூதாட்டியை ஐதராபாத்தில் வசிக்கும் மகளின் வீட்டிற்கு செல்வதற்குள் விமான நிலையம் அழைத்துச் சென்று** உதவிய பெண் காவலரை **ஆணையர் நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்து வெகுமதி அளித்தார்...**






# பின் ட்ராப் ஸைலென்ஸ் - ரமா ஸ்ரீநிவாசன்



உங்களால் ஒரு குண்டூசி விழும் சத்தத்தைக் காதால் கேட்க முடியுமா?

இந்த பின் ட்ராப் ஸைலென்ஸ் என்னும் மூன்று வார்த்தைக ளுக்கான அர்த்தம்தான் என்ன?

கீழே உள்ள சில நிகழ்வுகளில் எப்படி அமைதி என்பது வார்த் தைகளைவிட உரக்கவும், அழுத்தமான அர்த்தத்தோடும் திக ழ்ந்தது என்பதை நாம் பார்ப்போம்.



1. ஒரு முறை ஃபீல்ட் மார்ஷல் சாம் பஹாதுர் மானெக்ஷா அவர்கள்அஹமதாபாத்தில் ஓர் பொதுக் கூட்டத்தில் ஆங்கி லத்தில் உரையாடத் துவங்கினார்.

உடனே குழுமியிருந்த கூட்டமானது இவ்வாறு குரல் எழுப்பி யது:

“குஜராத்தி மொழியில் பேசுங்கள். நீங்கள் குஜராத்தி மொழி யில் பேசினால்மட்டுமே நாங்கள் உங்கள் பேச்சைக் கேட்போ ம்’’ என்று.

ஃபீல்ட் மார்ஷல் சாம் பஹாதுர் மானெக்ஷா தன் உரையை நிறுத்தி விட்டுகூடியிருந்த கூட்டத்தை தன் கண்களால் கடு மையான முக பாவத்துடன்வெறித்துப் பார்த்தார். பின்னர் அ வர் “நண்பர்களே, என்னுடைய வாழ்நாளில் நான் பல போர் களில் பங்கேற்று போர் புரிந்திருக்கின்றேன். சீக்கிய ரெஜிமெ ண்ட் வீரர்களிடமிருந்து பஞ்சாபி மொழியைக் கற்றேன். மரா த்தா ரெஜிமெண்ட்டிடமிருந்து மராத்திய மொழியைப் பயின் றேன்; தமிழ் மொழியை மதராஸ் ஸாப்பர்ஸ்ஸிடமிருந்து க ற்றேன்; வங்காள மொழியை வங்காள ஸாப்பர்ஸ்ஸிடமிருந் தும் இந்தி மொழியை பீஹார் ரெஜிமெண்ட்டிடமிருந்தும் நே பாளி மொழியை கூர்கா ரெஜிமெண்ட்டிடமிருந்தும் கற்றுக் கொண்டேன்.

ஆனால் துரதிருஷ்ட வசமாக எந்த ரெஜிமெண்ட்டிலுமே ஒரு குஜராத்தி போர் வீரர் கூட இல்லாததால் எனக்கு குஜராத்தி மொழியை கற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. எனவேதான் நான் இன்று ஆங்கிலத்தில் பேச முற்பட்டேன்" என்றாரே பார்க்க வேண்டும்.

அந்த நிமிடம் நீங்கள் அங்கிருந்து உற்று கேட்டிருந்தீர்களா னால் குண்டூசி விழும் சத்தம் உங்களுக்குக் கேட்டிருக்கும்.

2. நம் நாடு 1947ல் ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபின்னர் தற்காலிக பிரதமரான திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் முதல் இந்திய ராணுவத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக அனைத்து மூத்தராணுவ அதிகாரிகளுக்கும் மீட்டிங்கிற்கு அழைப்பு விடுத்தார்.



நேரு அவர்கள் "நாம் நம் இந்தியப் படைத் தலைவராக ஓர் ஆங்கிலேயஅதிகாரியை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். ஏனெனில் நம்யாருக்கும் ஒரு பெரும் படைக்கு தலைமையேற்கும் அனுபவம் இல்லை என்பதே காரணம்" என்று முன் மொழிந்தார்.

நாம் ஆங்கிலேயரிடம் பணி புரிந்து கற்று கொண்ட ஒரே முட்டாள்தனமான பாடம் மந்தை ஆடுகள் போல் அவர்களின் ஆணையைப் பின் பற்றி பணி செய்து கிடப்பதே. தங்கள் சுய நலத்திற்காக நம்முள்ளிருந்து நாமும் முன் நின்று வழி காட்

டலாம் என்னும் எண்ணத்தையே வேரோடு பிடுங்கி எறிந்து விட்டனர் அந்த கயவர்கள். எனவே சீருடையணிந்த போர் வீர்ர்களும் மற்றும் அனைத்துப் பொது மக்களும் நேருஜியின் முன் மொழிதலுக்கு எதிர் வாதமின்றி தலையாட்டினர்.

ஆயின், ஆட்டு மந்தையிலும் ஓர் வெள்ளாடு (அல்லது கருப் பாடா?) தென்படும் அல்லவா? அதே போல் நாத்து சிங்க் ராத் தோர் என்னும் ஓர் அனுபவம் மிக்க மூத்த அதிகாரி எழுந்து தன் அபிப்பிராயத்தை சபையில் வைக்க அனுமதி கோரினார்.




அந்த அதிகாரியின் சுதந்திர போக்கைக் கண்டு சிறிது திகைப் பும் ஆச்சரியமும் மனதில் நேருஜிக்கு எழுந்தாலும் வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவரை தாராளமாக தன் எண்ணத்தை வெளியிடுமாறு பணித்தார்.

அப்பொழுது ராத்தோர் ''நீங்கள் பாருங்கள் சார். நமக்கு ஓர் நாட்டைஆளும் திறமையும் இன்று வரை கிடையாது.
ஆகவே, நாம் பிரதமராக நம்இந்திய நாட்டையாளவும் ஓர் ஆங்கிலேயரையே நியமிக்கலாமே'' என்று
பதவிசாகக் கூறி விட்டு தன் இருக்கையில் அமர்ந்தார்.
ஆடிப் போய் விட்டார் திரு. நேருஜி அவர்கள்.

அந்த நிமிடம் நீங்கள் அங்கிருந்து உற்று கேட்டிருந்தீர்களா னால் ஒரு குண்டூசி விழும் சத்தம் உங்களுக்கு கேட்டிருக்கும்.

ஓர் இக்கட்டான இடை நிறுத்தத்திற்கு பிறகு நேருஜி ராத்தோ ரைப் பார்த்துக் கேட்டார் :
"அப்படியானால் நீங்கள் நம் நாட்டின் முதல் ராணுவ ஜெனரல்லாக தலைமை ஏற்கிறீர்களா?''

ராத்தோர் உடனே மறுத்துக் கூறினார் "சார், எங்களிடையே எங்கள் யாவரையும் வீட அனுபவமிக்கவரும், திறமை வாய் ந்தவருமான ஜெனெரல் கரியப்பா அவர்கள் இருக்கின்றார். அவரே அந்த தலைமை பொறுப்பை ஏற்க முழுத் திறமையு டையவர் ஆவார்'' என்றார்.

இப்படித்தான் மஹா புத்திமானான ஜெனெரல் கரியப்பா நம் இந்திய ராணுவத்தின் ஜெனெரலாகவும் ராத்தோர் அவர்கள் முதல் லெப்டினன்ட் ஜெனெரலாகவும் நியமிக்கப் பட்டார்கள் என்பது வரலாறு.

நண்பர்களே, நல்ல கருத்துக்களை தயக்கமின்றி, தடங்கலின் றிதைரியமாகத் தெரிவிக்கும் திறமையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்என்பதற்கு இது ஓர் அரிய எடுத்துக்காட் டாகும்.

௩. ராபர்ட் வைட்டிங்க் என்னும் ௬௩ வயது முதிர்ந்த அமெரிக் க நாட்டவர் விமானம் மூலம் பாரிஸிற்கு வந்திறங்கினார்.

அங்கு ஃபிரென்ச் சுங்க பரிசோதனை அறையில் தன் பாஸ் போர்ட்டை சூட்கேஸிலிருந்து தேடியெடுக்க சில நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்.



அங்கிருந்த சுங்க அதிகாரி மிக ஏகத்தாளமாக ராபர்ட் வைட் டிங்கை நோக்கி :
“நீங்கள் பிரான்ஸ் நாட்டிற்கு இதற்கு முன் வந்ததுண்டோ?” என்று வினவினார்.

தான் முன்னரே ஃபிரான்ஸ் நாட்டிற்கு வருகை தந்திருப்பதாக திரு. வைட்டிங்க் கூறினார்.

“அப்படியானால் உங்கள் பாஸ்போர்ட்டை கையில் தயார் நி லையில்வைத்திருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரிந் திருக்க வேண்டுமே”என்று அந்த சுங்க அதிகாரி மீண்டும் ஏளனமாக கேள்வி கேட்டார்.

**அதற்கு “நான் போன முறை வந்த போது என் பாஸ்போர்ட் டை காட்டவேண்டிய அவசியம் ஏற்படவில்லை” என்று அந்த அமெரிக்க ராபர்ட்வைடிங்க் அமைதியாக பதிலளித்தார்.**

**“அது நிச்சயமாக சாத்தியமற்றது. எந்த ஒரு அமெரிக்கரும் ஃ பிரென்ச்மண்ணில் காலடி எடுத்து வைக்கும்போது பாஸ் போர்ட்டை சோதனைக்குகாட்டியே ஆக வேண்டும்” என்று ஏளனமாகவும் எகத்தாளமாகவும் மீண்டும்உரக்கப் பேசினார் ஃபிரென்ச் அதிகாரி.**

**அந்த அமெரிக்க முதியவர் ஒரு நிமிடத்திற்கு அந்த ஃபிரென்ச் நாட்டு அதிகாரியை நிதானமாகவும் கடுமையாகவும் கண் ணுற்றார்.**

**பின்னர், திரு.ராபர்ட் வைட்டிங்க் தெளிவாக கீழ் வருமாறு பேச ஆரம்பித்தார்.**

"ஆம் அதிகாரி அவர்களே. நான் 1944ல் முதல் முதலாக ஓமேஹாகடற்கரையின் கரையேறி உங்கள் நாட்டிற்கு விடுத லைவாங்கித் தரமுற்பட்ட போது, இங்கு என்னுடைய பாஸ்போர்ட் டை காண்பிப்பதற்கு ஒரு ஃபிரென்ச் நாட்டவரைக் கூடக் காண முடியவில்லை………”

பின்னர் என்ன நடந்ததென்று நான் கூறவும் வேண்டுமோ?

**அந்த நிமிடம் நீங்கள் அங்கிருந்து உற்றுக் கேட்டிருந்தீர்களா னால் ஒரு குண்டூசி விழும் சத்தம் உங்களுக்கு கேட்டிருக்கும்.**

ஆம். நண்பர்களே,
“கண்டவர் விண்டதில்லை; விண்டவர் கண்டதில்லை” என்னும் பழமொழிக்கேற்ப செய்தவர்கள் சொன்னதில்லை; சொன்னவர்கள் செய்ததில்லை.

தன்னம்பிக்கையும் தன்னடக்கமும் ஒரு சேர கை கோர்த்துச் சென்றால்தான் நம் தன்மையானது பிரகாசிக்கும் என்று கூறி விடை பெறுகிறேன்.




பொருளடக்கம்

# அருண், அங்கிதா அண்ட் அறிவுஜீவி

**" அட! எல்லோருமே ரெடியாக இங்கே உட்கார்ந்திருக்கிறீர்களா! அருண் கூட ரெடியா! ஆச்சரியமா இருக்கு. வித்யா ஆண்ட்டி - இன்றைக்கு டிபன் ஏதும் செய்யவில்லையா? "**

**அருண் : " ஆண்ட்டி டிபன் செஞ்சிருந்தா அதை சாப்பிட்டுவிட்டு, அப்படியே இங்கே ஒரு குட்டித் தூக்கம் போட, கையில ஒரு தலைகாணி கொண்டு வந்திருக்கே போலிருக்கே ! "**

**அங்கிதா அருணை முறைக்கிறாள் ....**

**வித்யா : " அதை ஏன் கேட்கிறே! இன்றைக்கு காஸ் தீர்ந்து, சிலிண்டர் புதுசு மாற்றினோம். புது சிலிண்டர் வாஷர் சரியில்லை போலிருக்கு - காஸ் லீக் வாசனை வீடெங்கும் வந்தது. உடனடியாக சிலிண்டரை டிஸ்கனெக்ட் செய்துவிட்டோம். போன் செய்து, எமெர்ஜென்சி சர்வீஸ் வரச்சொன்னோம். இந்தக் கொரோனா கெடுபிடியில் சர்வீஸ் ஆள் வருவதற்கு பல தடங்கல்கள். சமையல் வேலைகளை மட்டும் எப்படியோ சமாளித்து இண்டக்ஷன் ஸ்டவ்வுல செய்து முடித்தேன். "**

**அங்கிதா : " நல்லவேளை நீங்க டிபன் எதுவும் செய்யலை. நான் எங்க வீட்டு கன்னட குக் செய்த 'மண்டக்கி' நம் எல்லோருக்கும் கொண்டுவந்திருக்கேன். நாம் எல்லோரும் அதை சாப்பிட்டுக்கொண்டே பேசுவோம்"**

**அருண் : " அது என்ன மண்டக்கி! 'குண்டக்க மண்டக்க' எதையாவது செய்தால் அது 'குண்டக்கி மண்டக்கி' என்று சொல்லலாமே! ஆ ! பெரிய பையாக இருக்கே! எவ்வளவு கிலோ குண்டச்சி ... ஓ சாரி - மண்டக்கி அது? "**

**அங்கிதா : " அரைக்கிலோவை விட கம்மிதான்! ஆண்ட்டி பெரிய அகலமான பாத்திரம் ஒன்று கொண்டுவாங்க!"**

**வித்யா பெரிய அளவு எவர்சில்வர் பேசின் கொண்டுவந்து வைத்தாள்.**

**அங்கிதா பையில் இருந்ததை, "டொட்டடைங்" என்று சொல்லிக்கொண்டே, அந்த பேசினில் கொட்டினாள்.**

**அருண் : " அடச்சே ! எங்கேயோ ஆயுத பூஜையில், யாரோ படைத்த 'அவல் பொரி, கடலை'யா! இதுதான் மண்டக்கியா? நான் என்னவோ ஏதோன்னு நெனச்சேன்! "**

**வித்யா கொஞ்சம் மண்டக்கியை எடுத்து வாயில் போட்டு சுவைத்துப் பார்க்கிறாள். " அட! டேஸ்ட் சூப்பரா இருக்கே. எப்படி செய்வது இதை? "**

**வித்யா சொன்னதைக் கேட்ட அறிவுஜீவியும் அருணும், தாங்களும் ஒரு பிடி மண்டக்கி சாப்பிட்டுப் பார்க்கிறார்கள்.**

**அறிவுஜீவி : " பேஷ், பேஷ் ரொம்ப நல்லா இருக்கு. கொஞ்சம் இரு - இதில் அந்த க கு என்னவெல்லாம் போட்டு செய்திருக்கிறாள் என்று பார்ப்போம். அரிசிப்பொரி, மஞ்சள்தூள், உப்பு, காய்ந்த மிளகாய், வதக்கிய பூண்டு, வறுத்த வேர்கடலை, பொட்டுக்கடலை எல்லாம் இருக்கு. "**

**அங்கிதா : " ஆமாம் அங்கிள். கடாயில் எண்ணெய் விட்டு, அது காய்ந்ததும் அதில் வேர்க்கடலை,பொட்டுக்கடலை போட்டு, லேசாக வதக்கி, காய்ந்த மிளகாயைக் கிள்ளிப்போட்டு, உரித்த பூண்டு பற்கள் போட்டு, மஞ்சள் பொடி, உப்புத்தூள் போட்டு, கடைசியாக அரிசிப்பொரி போட்டு ஒரு பிரட்டுப் பிரட்டி, ஸ்டவ்வை ஆஃப் செய்யவேண்டும். சூடு ஆறியதும், மண்டக்கி ரெடி! "**

**அருண் : " அங்கிள் நீங்க அடுத்த பாயிண்ட் சொல்லுங்க"**

**அ ஜீ : "பாயிண்ட் 11 - ஒருவர், ஒரு விசயத்தை, 'தான் செய்யவில்லை' என்று அதிக முறை கூறி விவாதிப்பாரானால், 'அதை அவர் செய்திருக்கலாம்' என்று உளவியல் கூறுகிறது"**

அருண் : " அது எப்படி அங்கிள்? சப்போஸ் ஒருவர் உண்மையிலேயே ஒரு விஷயத்தை செய்யாதவர் என்று வைத்துக்கொள்வோம். அப்போ அவர் என்ன சொல்லவேண்டும்? தான்தான் செய்தேன் என்றா சொல்லமுடியும்?"

அ ஜீ : " அது இல்லை அங்கே பாயிண்ட். ஒருமுறை தான் செய்யவில்லை என்று கூறிவிட்டு சும்மா இருந்தால் போதும். திரும்பத் திரும்ப அதை தான் செய்யவில்லை என்று விவாதம் செய்வதுதான் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும்."

வித்யா : " இதெல்லாம் நீதிபதிகளுக்கும், வக்கீல்களுக்குமான பாயிண்ட். அடுத்த தகவல் என்ன?"

அ ஜீ : "பாயிண்ட் 12 - ஒருவர் அதிகமாக விரல் நகம் கடிப்பவராக இருந்தால் அவர் பதற்ற நிலையில் உள்ளவராவார்; ஆரம்ப உளவியல் பிரச்சினைக்கு உள்ளாக போகின்றார் என்று அர்த்தம்"

அங்கிதா : " நான் சின்ன வயசுல, என் தோழியைப் பார்த்து, அவள் செய்வது போலவே நகம் கடிக்கும் பழக்கம் கொஞ்சம் வந்தது. ஆனால், நான் நகம் கடிப்பதைப் பார்த்த என்னுடைய பாட்டி, என் கை விரலில் ஒரு சுண்டு சுண்டினாள். பயங்கர வலி. அதோடு போச்சு அந்தப் பழக்கம்"

வித்யா : " சிலர் குழந்தைகளுக்கு நகம் கடிக்கும் பழக்கம் போவதற்கு, அல்லது விரல் சூப்பும் பழக்கம் போவதற்கு, விரல் முனைகளில் வேப்பெண்ணை தடவி விட்டுவிடுவார்கள்!"

அ ஜீ : "பாயிண்ட் 13 - ஒருவருக்கு கோபம் அதிகமாக வருமானால் அவர் பதற்றமாக இருக்கிறார் என கருதமுடியும். அவர் அந்த பதற்றத்தினை குறைத்துக்கொள்ள வேண்டும்"

வித்யா : " கோபம் இருக்குமிடத்தில்தான் குணமும் இருக்கும் என்று சொல்வார்கள்!"

அ ஜீ : " அப்போ ஆத்திரம் இருக்கும் இடத்தில் அப்பளக்குழவியும் இருக்குமோ?"
அங்கிதா : " என்ன அங்கிள் - சமீபத்தில் ஏதாவது என்கவுண்டர் இங்கே நடந்துச்சா ?"
அ ஜீ புன்னகைக்கிறார்!

அ ஜீ : " அடுத்து பாயிண்ட் 14- ஒருவர் அதிகாலையில் எழுபவராக இருந்தால் அவருக்கு பல்வேறுப்பட்ட ஆரோக்கியமான விசயங்களும், வாழ்க்கையில் வெற்றி பெறக்கூடிய விசயங்களும் காத்திருக்கும்.

அங்கிதா : " பாவம் அருண் - அவனுக்கு இதெல்லாம் காத்திருக்காது! "

அருண் : " அப்படிச் சொல்லாதே - நான் காலேஜ் போகிற நாட்களில் காலை ஏழரைக்கு எழுந்திருப்பேன். ஆனால் லீவு நாட்களில் மூன்று மணிக்கே எழுந்து விடுவேன் தெரியுமா!"

வித்யா : " அட ஆச்சரியமா இருக்கே ? ஏன் அப்படி?"

அங்கிதா : " ஆண்ட்டி - ஆச்சரியப்படாதீங்க - அருணுடைய தாத்தா நேற்று என்ன சொன்னார் என்றால் - லீவு நாட்களில் சாயந்திரம் மூன்று மணி வரை அருண் தூங்குவானாம்! "

அ ஜீ : "பாயிண்ட் 15 ஒருவர் பகலில் உறங்கி, இரவில் விழித்திருப்பவராக இருந்தால் இவ்வாறானவர்க்கு இதய நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும்"

அங்கிதா : " அப்போ நம்ம அருணுக்கு இதய நோய் வரவே வராது. அவன் பகலில் காலேஜிலும் தூங்கி, இரவில் வீட்டிலும் தூங்கறானே!"

அருண் பொய்க்கோபத்துடன் எழுந்து அங்கிதா பக்கம் போக, அங்கிதா வேகமாக எஸ்கேப் ஆக, அன்றைய அரட்டைக் கச்சேரி முடிவுக்கு வந்தது!

(தொடரும்)

பொருளடக்கம்

# அ ப கு - கதை விமரிசனம் : கு - கு

'அப்பம் பங்கிட்ட குரங்கு' கதை படித்த கு கு அந்தக் கதைக்கு விமரிசனம் எழுதி அனுப்பியுள்ளார்.




இதில் வருகின்ற குரங்கு காரெக்டர், முதலாளித்துவ சுரண்டலானது இந்த நாட்டில் எப்படி எல்லாம் வேரூன்றி, தொழிலாள வர்கத்தை நசுக்கி, ஏமாற்றிப் பிழைக்கிறது என்பதை தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பசியால் துடிக்கும் இரண்டு ஏழை பூனைகள், ஒரே ஓர் அப்பத்தைக் கண்டால் என்ன செய்யும்? பாய்ந்து அதை கவர்வது இயற்கைதானே! பசிக்கு உண்டா பஞ்சமா பாதக எதிர்ப்பு உணர்வுகள்?

மேலும் அந்த அப்பத்தை செய்து வைத்தவன் பசியோடிருந்திருந்தால், அதை விட்டுவைக்காமல், அப்பொழுதே வாயிலிட்டு, வயிற்றுக்குள் அனுப்பி, அந்தப் பசிக்கொடுமையை தன் வயிற்றிலிருந்து வேரறுத்து வெட்டிச் சாய்த்திருப்பானே. ஆக, அந்த அப்பம், அதைப் படைத்தவனுக்கு அதிகப்படிதானே!

அந்த உபரி அப்பத்தை தம்முடைய உழைப்பால் கவர்ந்து சென்ற பூனைகள் தமக்குள் ஒரு தொழிற்சங்கம் ஏற்படுத்திக்கொண்டு, அப்பத்தை சரிபாதியாக பிரித்துக்கொண்டிருக்கலாம் அல்லவா?

தொழிற்சங்க அமைப்பு இல்லாததால் அவை தராசு ஒன்றை கையில் பிடித்திருந்த குரங்கைக் கண்டதும் - இங்கே நமக்கு நீதி கிடைக்கும், நியாயம் கிடைக்கும், தர்மம் வெல்லும், எனும் அப்பம் மெல்லும் ஆசையில் குரங்கை அணுக .....

அந்தோ ! என்ன பரிதாபம்!

நிகழ்ந்தது என்ன?

மற்றவர்களின் உழைப்பை மதியூகமாக சுரண்டிச் சாப்பிடும் மந்தி கையிலே நியாயத் தராசும், நெஞ்சிலே வஞ்சகமும் கொண்டு அந்த பூனைகளின் உழைப்பை நயவஞ்சகமாக சுரண்டிச் சாப்பிட்ட அந்த நிகழ்வை படிக்கும்போது நம்முடைய மனதில் எழுகின்ற உணர்ச்சிகளை வார்த்தையில் வடித்திட இயலாது. கதையை படித்து முடிக்கும்போது, என் கண்கள் நீர்க்குட்டையாகி, நான் கைக்குட்டை தேட வேண்டியதாயிற்று.

இந்தக் கதை எழுதியவருக்கு என் வேண்டுகோள் இதுவே :

அடுத்த கதையில்,

ஏழைப் பூனைகள் எதிர்காலத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய அவசியத்தை எழுதுங்கள்.

அப்பத்தை கவராமல் எலியைக் கொன்றால், சமூகத்திற்கு செய்யும் நல்லுதவியாக இருக்கும். மேலும் - பங்கிடும் குரங்குகள் செத்த எலியைத் தின்னாது என்பதும் உறுதி!

**( குறிப்பு : புத்தக விமரிசனத்தில் காணப்படும் விமரிசனக் கருத்துகள், விமரிசகருடையவை மட்டுமே. மின்நிலா ஆசிரியர் குழுவின் கருத்துகள் அல்ல.)**

**மின்நிலா ஆசிரியர்கள்.**

பொருளடக்கம்

# எழுது பொருள்

அடுத்த வாரம் !

**இந்த வார மின் நிலா பற்றிய உங்கள் கருத்துகளை,**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.**

**நன்றி.**

**வணக்கம்.**

**உங்களைப்பற்றி நீங்கள் ...**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**


**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**

**engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**

**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**


KGG